**சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறை ஆணைகள்**

**பிறப்பிப்பவர்: திரு.மு.வே.செந்தில்குமார், எம்.இ.,**

**<u>சுருக்கம்</u>**

பணிக்குழு – தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இளநிலை உதவியாளர் பதவிக்கு 2018 –2019, மற்றும் 2019–2020 வரையிலான காலத்திற்கு தெரிவு செய்யப்பட்டு – இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்தமை – சாதிச் சான்று உண்மைத் தன்மை உறுதி செய்யப்பட்டது – பணி வரன்முறை செய்து – ஆணை வழங்கப்பட்டது.

---

ஒ1 /19441 /2020–1 நாள்.15.06.2023

| | |
|---|---|
| படிக்கப்பட்டது: | 1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண். 2387/PSD–I/2020, நாள். 28.05.2020.<br>2. சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஜி3/16386/2020–2, நாள். 29.07.2020.<br>3. சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை எண். ஒ1/12283/2020, நாள். 04.08.2020.<br>4. சென்னை, முதன்மை செயலாளர்/தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடித எண். ஜி4/16386/2020, நாள். 25.05.2023. |

***

**<u>ஆணை–</u>**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தின்படி தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, மேலே 2வதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் இவ்வியக்ககத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு மேலே 3வதாக படிக்கப்பட்ட செயல்முறை ஆணை மூலம் சென்னை, தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இணை இயக்குநர்–II அலுவலகத்தில் பணியமர்த்தப்பட்ட திரு.சி.விக்னேஷ்வரன், இளநிலை உதவியாளரின் பணிவரன்முறையானது சென்னை, உயர்நீதிமன்ற மதுரை கிளை மற்றும் சென்னை உயர்நீதிமன்றத்தில் 2018–2019 மற்றும் 2019– 2020–ம் ஆண்டில் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வுகள்–IVல் அடங்கிய தெரிவுகளுக்கெதிராக நிலுவையிலுள்ள ரிட்மனுக்களின் இறுதித் தீர்ப்பிற்குட்பட்டது எனவும்,

" The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Service Examination Group IV Services for the year 2018-2019 and 2019 - 2020 ".

இவரது பணியினை மாநில அளவிலான கண்காணிப்புக் குழுவின் (State Level Scrutiny Committee) ஒப்புதல் பெற்ற பின்னரே வரன்முறை செய்யப்பட வேண்டும் என மேலே 2ல் படிக்கப்பட்ட செயல்முறை ஆணை வாயிலாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, மேலே 4ல் படிக்கப்பட்ட முதன்மை செயலாளர்/தொழிலாளர் ஆணையர் அவர்களின் கடிதத்தில் தனியரது சாதிச் சான்று உண்மைதன்மை உறுதி செய்யப்பட்டுள்ளதாக அறிக்கை பெறப்பட்டுள்ளதால். தனியரது பணியினை அன்னார் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் முதல் வரன்முறை செய்யலாம் என தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தெரிவித்ததின் அடிப்படையில், உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துள்ளதால், மேற்கண்ட நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான <u>14.08.2020</u> முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்கண்ட பணியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் தமிழ்நாடு அரசு பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ன் பிரிவு 28(1)ன் படியும், தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் சிறப்பு விதிகளின் கீழான விதி 32-ன் படியும் அவர் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தொடர்ச்சியான மூன்று ஆண்டுகள் பணிக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது.

இத்தகுதிகாண் பருவ காலத்தில் அரசாணை எண். 130 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை நாள். 22.07.2008ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பணி நியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டு வருடங்களுக்குள், " தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வில்" தேர்ச்சி பெற வேண்டும் எனவும், "பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியில்" தேர்ச்சி பெற்றால் மட்டுமே தகுதிகாண் பருவம் பூர்த்தி செய்ய இயலும் என்பதால் அவர் அத்தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்திரவிடப்படுகிறது.

(ஒ.ம்)/-மு.வே. செந்தில்குமார்
இயக்குநர்(மு.கூ.பொ),
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
சென்னை-32.

**<u>பெறுநர்</u>**

திரு.சி.விக்னேஷ்வரன்,
இளநிலை உதவியாளர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநர் –1 அலுவலகம்,
திருச்சி.

<u>நகல்</u>–

துணை இயக்குநர் –1,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருச்சி.
(தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்).

<u>நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

முதன்மை செயலாளர்/தொழிலாளர் ஆணையர்,
சென்னை – 6.

நகல்

இணை இயக்குநர்–2,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், சென்னை – 32.

பணிப்பதிவேடு, இருப்புக் கோப்பு/உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

க. ராஜசேகர் 16/6/2023
இயக்குநருக்காக,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
சென்னை–32.